**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.**

**S.C. No.75/2024**

**P.W.9**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பவித்ரா |
| தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 29.07.2025.

(எதிரிகள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.06.2023ம் தேதி நான் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் காலை சுமார் 8.50 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக இருந்த போது நாமக்கல் மாவட்டம் பவித்திரம் தோட்டமுடையான்பட்டியை சேர்ந்த சிக்கு கவுண்டர் மகன் கணேசன் என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை அவருடைய வீட்டில் மேற்படி தேதியில் காலை 8.30 மணியளவில் இரண்டு தெரிந்த நபர்கள் அரிவாளால் (Sickle) தாக்கியதாகவும், அதில் அவர் காயம்பட்டதாகவும் அவரது மனைவி கூறினார். மேற்படி நபரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது முன்னங்கையில் 7x5x2 செ.மீ அளவில் உள்ளே தசை நார்கள் தெரியும் அளவிற்கு ஆழமான தோல் மற்றும் அதன் அடியில் உள்ள கொழுப்பு பகுதி பிரித்து எடுக்கப்பட்ட வெட்டுக்காயம் காணப்பட்டது. அதில் ஒரு தசை நார் துண்டுபட்டு காணப்பட்டது. 2. இடது உள்ளங்கையில் 5x1x1 செ.மீ மற்றும் 3x1x1 செ.மீ அளவில் இரண்டு கிழிந்த காயங்கள் காணப்பட்டன. 3. இடது கையில் 4வது விரலில் 1x0.5x0.2 செ,மீ அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. 4. வலது முன்னங்கையில் 3x0.5x0.5 செ.மீ அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது.

மேற்படி நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதிக்க அறிவுரை செய்தேன். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். பின்னிட்டு அவருக்கு தசை நார்கள் துண்டிக்கப்பட்ட காயங்கள் இருந்த காரணத்தினால் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக்காக ஆம்புலன்சு மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றார். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேடு என்னால் பதிவு செய்யப்பட்டது தான். அது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டது குறித்து காவல் துறைக்கு என்னால் கொடுக்கப்பட்ட கடிதம் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 கொடுவாளால் வெட்டுவதால் மேற்படி காயங்கள் ஏற்பட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீஸ் இன்டிமேசனில் குறிப்பிட்டுள்ள படி காயம்பட்ட நபர் அவருடைய சொந்த வண்டியில் மருத்துவமனைக்கு வந்தரா என்றால் அப்படி தான் சொன்னார். மேற்படி போலீஸ் இன்டிமேசனில் 13.06.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. காயம்பட்ட நபரை யார் தாக்கியது என்று பெயர் குறிப்பிட்டு காயம்பட்ட நபராலோ அவரை அழைத்து வந்த அவரது மனைவியாலோ குறிப்பிடப்படவில்லை என்றால் பெயர் குறிப்பிடப்படவில்லை. இரண்டு தெரிந்த நபர்கள் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்த போது கணேசன் சிகிச்சை முடிவதற்குள் அவரது உறவினர்கள் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூட்டி சென்று விட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் அப்படி சொல்லவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 161(3) வாக்குமூலத்தில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அப்படி வாக்குமூலம் கொடுக்கவில்லை. மேற்படி நபர் முறையான டிஸ்சார்ஜ் சம்மரியுடன் சிகிச்சையில் இருந்து வெளியேறினாரா என்றால் அது எனக்கு தெரியாது. நான் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து உள்நோயாளியாக மட்டும் சிகிச்சை அளித்தேன். முதல் விசாரணையில் ஆம்புலன்சு மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவர் சேலம் அரசு

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்றால் அந்த விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி நபர் ஆம்புலன்சு மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டாரா என்றால் பின்னிட்டு தெரிந்து கொண்டேன். நேரடியாக தெரியாது. மேற்படி நபர் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்ட சமயத்தில் அவருடைய மனைவி அரிவாளால் (sickle) தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்சமயம் என்னிடம் காட்டப்பட்ட சா.பொ.1 கொடுவாள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்த போது ஆயுதங்களை காட்டி மேற்படி ஆயுதங்களால் மேற்படி நபருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்று விசாரித்தனரா என்றால் இல்லை. மேற்படி காயங்கள் ஏற்படுத்தப்பட்ட ஆயுதத்தில் ரத்தக்கறை கண்டிப்பாக ஏற்பட்டிக்கும் என்றால் சரிதான். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கொடுவாளில் ரத்தக்கறை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

A SHANMUGAPRIYA

Digitally signed by A SHANMUGAPRIYA
Date: 2025.07.29 17:51:47 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்